## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

S.C. No.75/2024

P.W.3 (L.W.3)

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணி |
| தந்தை பெயர் | : | பரமசிவம் |
| கிராமம் | : | ஆத்திராம்பட்டி, துறையூர் திருச்சி மாவட்டம் |
| வட்டம் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 65 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 02.04.2025.

(எதிரிகள் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)
(சாட்சியின் அடையாளமாக அவரது ஒருங்கிணைந்த ஊனச்சான்றிதழ் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது. அந்த அட்டை எண்.TN 5990420650022844).

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கணேசனை தெரியும். ஆஜர் 1ம் எதிரி சுப்ரரமணியை தெரியும். 2ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி என்று தெரியும். இன்றிலிருந்து இரண்டு வருடத்திற்கு முன்பு 1ம் எதிரி சுப்ரமணி கூப்பிட்டதன் பேரில் அவருடைய தோட்டத்திற்கு உழவு ஓட்டுவதற்காக நான் சென்றிருந்தேன். நான் உழவு ஓட்டிக்கொண்டிருந்த போது காலை சுமார் 8.30 மணிக்கு 1ம் எதிரி சுப்ரமணி உரம் போட்டுக்கொண்டிருந்தார். அ.சா.1ம், 1ம் எதிரியும் ஒருவரையொருவர் கை கலப்பு செய்து கொண்டு ஒருவருக்கொருவர் தோளில் கை போட்டுக்கொண்டு கீழே விழுந்து கிடந்தார்கள். நான் அருகே ஓடிச்சென்று அவர்களை விலக்க போன போது அவர்கள் இருவரும் ஒரு கொடுவாளை பிடித்து கொண்டிருந்தார்கள். 1ம் எதிரி சுப்ரமணி கொடுவாளின் கைப்பிடியை பிடித்து கொண்டிருந்தார். கணேசன் கொடுவாளின் நடுப்பக்கம் பிடித்து கொண்டிருந்தார். நான் கொடுவாளை பிடுங்கி போட்டு விட்டு அவர்கள் இருவரையும் விலக்காட்டிவிட்டேன். கீழே கிடந்த கணேசனை நான் தூக்கிவிட்ட போது அவரது இடது கையில் வெட்டுக்காயம் இருந்தது. அவர் துணியில் ரத்தம் பட்டிருந்தது. அதன் பிறகு கணேசன் அங்கிருந்து சென்றுவிட்டார். எதிரிகளும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பின்னர்

கணேசன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.சா.பொ.1 தான் 1ம் எதிரி சம்பவத்தின் போது கையில் பிடித்திருந்த கொடுவாள் ஆகும். இது சம்பந்தமாக எருமப்பட்டி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு கண் நன்றாக தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 கொடுவாளில் ரத்தக்கறை இருக்கிறதா என்றால் இல்லை. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் நான் சுப்ரமணி நிலத்தில் உழவு ஓட்ட சென்ற இடத்தில் தான் காலை 8.30 மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். சம்பவம் யாருடைய வயலில் நடந்தது என்றால் சுப்ரமணி வயலில் நடந்தது. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து வாங்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு வேற எதுவும் தெரியாது என்றால் சரிதான். கோர்ட்டிற்கு என்னை யார் கூட்டி வந்தார்கள் என்றால் அ.சா.1 கணேசன் கூட்டி வந்தார். போலீசார் எனக்கு போன் செய்து வர சொன்னார்கள். கோர்ட்டிற்கு வந்தேன். கணேசன் கோர்ட்டில் என்ன சொல்லவேண்டும் என்று சொல்லி கொடுத்தாரா என்றால் சொல்லி கொடுக்கவில்லை. என்ன பிரச்சினை அவர்களுக்குள் என்று எனக்கு தெரியாது. கணேசன் எப்படி ஆஸ்பத்திரிக்கு போனார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு காது சரிவர கேட்காது என்றால் சரிதான்.

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2025.04.02 16:55:27 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்